**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.226/2024 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு. விஜயகுமார் |
| Husband/Father Name | சண்முகம் |
| Village /Area | வெளிதாங்கிபுரம் |
| Taluk | நெமிலி |
| Occupation | டாஸ்மாக் விற்பனையாளர் |
| Age | 47 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.08.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் புன்னை டாஸ்மாக் கடை எண்.11018 விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். அசா.1 என்னுடன் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறார். 2024 ஆம் ஆண்டு டாஸ்மாக் கடையில் திருடு போனதாக எனக்கு தகவல் கிடைத்தது நான் பணியில் இல்லை. நான் 09.00 மணிக்கு கடைக்கு வந்தேன். நான் ரூ.42,360/- பணம் குறைந்ததாக கூறினார்கள். மறுநாள் போலீசார் என்னை சாட்சியாக இருக்கும் படி கேட்டார்கள். நான் கடையிலேயே இல்லை நான் எப்படி சாட்சி சொல்வது என்று கேட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் கிருஷ்ணன் விசாரணைக்கு வந்தார். விசாரணையில் 07.00 மணிக்கு நான் கடையில் இல்லை என்று கூறினேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் 1 முதல் 6 வரை எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான்.

என்னுடன் டாஸ்மாக்கில் பணிபுரியும் கிருஷ்ணன் என்பவர் உடன் கையொப்பம் செய்துள்ளார். 1 முதல் 6 வரை எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் முறையே அதசா. 4 முதல் அதசா.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலவாது கையொப்பம் என்னுடையது தான் என்னுடன் டாஸ்மாக்கில் பணிபுரியும் கிருஷ்ணன் என்பவர் உடன் கையொப்பம் செய்துள்ளார் என்னிடம் காண்பிக்கப்படும் 1 முதல் 6 வரையிலான கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ.10 முதல் அதசாஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் 1. 2, 4 தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலீசார் அழைத்தத்ன பேரில் நானும் கிருஷ்ணனும் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டற்கிணங்க நானும் கிருஷ்ணணும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்று சொன்னால் சரிதான். எத்தனை கையொப்பம் போட்டேன் அதில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது. என் முன்னிலையில் யாரையும் விசாரித்து எந்த பொருளையும் பறிமுதல் செய்யவில்லை. மேற்கொண்டு போலீசார் விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் 3. 5 மற்றும் 6 தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலீசார் அழைத்தத்ன பேரில் நானும் கிருஷ்ணனும் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டற்கிணங்க நானும் கிருஷ்ணணும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்று சொன்னால் சரிதான். எத்தனை கையொப்பம் போட்டேன் அதில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது. என்

முன்னிலையில் யாரையும் விசாரித்து எந்த பொருளையும் பறிமுதல் செய்யவில்லை. மேற்கொண்டு போலீசார் விசாரிக்கவில்லை.

**(ஒம்./-) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**